பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 9உ (25—8—67) வெள்ளி ★ வெளியூர்: ஆவணி 10 (26—8—67) சனி [இதழ்: 61

## துயர்துடைப்பு நிதிக்கு ரூ. 3 இலட்சம்!

நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடம் சென்னைத் தீ விபத்துத் துயர்துடைப்பு நிதிக்காக ரூ. 3 இலட்சம் கொடுக்கப்பட்டது.

இதுவரை இந்நிதிக்கு மொத்தம் ரூ. 22 இலட்சம்வரை சேர்ந்துள்ளதாக கோவில்பட்டி பொதுக்கூட்டத்தில் அண்ணா அறிவித்தார்.

# தூத்துக்குடித் திட்டம்: கைவிடவோ காலங்கடத்தவோ இடங்கொடோம்!

## ஏற்படும் இழப்பையும் மாநில அரசு ஏற்கும்

### முதலமைச்சர் அண்ணா உறுதி

தூத்துக்குடி, ஆக. 24—

**"தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தைக் கைவிடுவதையோ, தாமதப்படுத்துவதையோ தமிழக அரசு அனுமதிக்கப் போவதில்லை"**

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று இங்கு திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத் தலைமைப் பொறியர், மற்றும் ஊழியர்களும், தொழிலாளர்களும் அளித்த பாராட்டுக்கு அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்கள்.

துறைமுகத் திட்டப் பகுதியில் விரைவுப் போக்குவரத்துக்கான வழியை அண்ணா அவர்கள் திறந்துவைத்துப் பேசுகையில் [illegible] குறிப்பிட்டதாவது:—

"தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் பொருளாதார அடிப்படையில் பயனுள்ளதாக இருக்காது என்று மத்திய அரசு கருதிக்கொண்டிருக்கிறது. தமிழக அரசு 'இத்திட்டத்தை நிறைவேற்றி முடிப்பது' என்று முடிவு செய்துள்ளது.

இத்திட்டம் நிறைவேற்றி முடிந்த பிறகு எதிர்பார்த்தபடியே இலாபகரமாகச் செயல்படவில்லை என்பது தெரிந்தால், அப்போது ஏற்படும் இழப்பை ஏற்க மாநில அரசு ஆயத்தமாக உள்ளது. (இத்திட்டம் நிறைவேறி செயல்படத் தொடங்கியதும் 18 மாத காலத்தில் ரூ. 50 இலட்சம் வரை இழப்பு ஏற்படும் என்பது மத்திய அரசின் மதிப்பீடாகும்.)

தூத்துக்குடித் திட்ட நடவடிக்கைக் குழுத் தலைவர் எம்.எஸ். சிவசாமி எம்.எல்.ஏ., செயலாளர் வி.எஸ்.எஸ். கே. கணேசன் ஆகியோர், தூத்துக்குடித் திட்டத்தை நிறைவேற்றச் செய்ய வேண்டியதையெல்லாம் மாநில அரசு செய்யுமாறு முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்.

## இந்திரா காந்தி கூறியதென்ன?

### சந்திப்புக்குப் பின் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 24—

மதுரையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்து 20 நிமிட நேரம் பேச்சு நடத்திய பிறகு முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் பேசுகையில், 'தூத்துக்குடித் திட்டம்பற்றி எவ்விதக் கவலையும் கொள்ளத் தேவையில்லை' என்றார்.

"இந்த ஆண்டு திட்டமிட்டபடி தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் மத்திய அரசு, ரூ. 1 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளதே—ஏன்?" என்று தாம் கேட்டதாகவும், அதற்குத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, 'பணத்துக்கு நான் எங்கே போவது?' என்று பதிலளித்ததாகவும் அண்ணா தெரிவித்தார்.

### சேலம் உருக்காலை!

சேலம் உருக்காலை பற்றித் தாம் சென்னையில் கூறியது தவறாக வெளியிடப்பட்டுள்ளது என்று இந்திரா காந்தி தெரிவித்தார்; 'எந்த உருக்காலைக்கும் இப்போது பணம் இல்லை' என்று மட்டுமே தாம் கூறியதாக இந்திரா தம்மிடம் தெரிவித்ததாக அண்ணா அறிவித்தார்.

"சேலம் உருக்காலை பற்றிச் சென்னையில் தாங்கள் தெரிவித்த கருத்தை மேலும் விளக்குவீர்களா?" என்று அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டதற்கு கூடிய விரைவில், வாய்ப்புக் கிட்டியதும் தாம் விளக்கமாக எடுத்துக்கூறுவதாக திருமதி இந்திரா காந்தி தெரிவித்தாராம்.

இப்போது ஓய்வை நாடி கொடைக்கானல் செல்லுகிற நேரத்தில் தம்மால் அந்த விளக்கத்தை அளிக்க இயலாதென்றும் அவர் கூறினாராம்.

சேலத்தில் உருக்காலை நிறுவுவதில் கூட்டுச் சேர்ந்து ஒத்துழைத்திட ஜப்பானிய உருக்குத் தொழிலதிபர்கள் தயாராக இருப்பது குறித்துத் தாம் தலைமை அமைச்சரிடம் எடுத்துக்கூறியதாக அண்ணா தெரிவித்தார்.

ஜப்பானிய ஒத்துழைப்புக் குறித்த விவரங்களைத் தமக்கு அளித்திடுமாறு திருமதி இந்திரா, அண்ணா அவர்களிடம் கேட்டாராம்.

இவ்வாரத்தில் மத்திய அரசின் உருக்குத்துறை அமைச்சர் சென்னா ரெட்டியைச் சந்திக்க இருப்பதாகவும், அதுசமயம் ஜப்பானியரது ஒத்துழைப்புத் தொடர்பான விவரமான தகவல்களை அவரிடத்தில் தெரிவிப்பதாகவும் அண்ணா அவர்கள், இந்திரா காந்தியிடம் தெரிவித்திருக்கிறார்.

## தலைமையமைச்சர் மதுரை வருகை

### விமான நிலையத்தில் அண்ணா வரவேற்பு

மதுரை, ஆக. 24—

சென்னையிலிருந்து ஐ. ஏ. எப். விமான மூலம் மதுரைக்கு இன்று வந்துசேர்ந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தியை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஏலக்காய் மாலையணிவித்து வரவேற்றார்.

"தாங்கள் மாநிலத் தலைநகருக்கு வந்தபோது வரவேற்க இயலாமற் போனதற்காக வருந்துகிறேன்"

என்று இந்திரா காந்தியிடம், அண்ணா அவர்கள் கூறினார்.

அண்ணா அவர்கள், தமது நெல்லை மாவட்டச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று காலைதான் மதுரைக்கு வந்து சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திரா சென்னை வந்தபோது, அண்ணா அவர்கள் ஏற்கனவே நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தார்.

## அறிஞர் அண்ணா அறிவுரைப்படி மாணவர்கள்

### கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

மதுரை, ஆக. 25—

மதுரையில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு மாணவர்கள் தலைமை அமைச்சர் இந்திராவுக்குக் கறுப்புக் கொடி காட்டத் தீர்மானித்திருந்ததைக் கைவிடுமாறு அறிஞர் அண்ணா அவர்கள் கூறியும், அவர்கள் கைவிடாமலிருந்தனர். அண்ணா அவர்கள் நெல்லை மாவட்டச் சுற்றுப் பயணத்தினின்றும் திரும்பி மதுரையில் மாணவர்களின் பிரதிநிதிகளை அழைத்து அறிவுரை கூறி, கறுப்புக் கொடி நிகழ்ச்சியைக் கைவிடும்படிச் செய்தார்.

தமக்குக் கறுப்புக்கொடி காட்ட இருந்த மாணவர்களை அண்ணா அவர்கள் தடுத்து நிறுத்தியது அறிந்து இந்திரா காந்தி அண்ணா அவர்களிடம் மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார்.

## மொழிப் பிரச்சினை பற்றி இந்திராவின் கருத்து

### மாணவர்களுக்கு எரிச்சலூட்டியதாக அண்ணா சுட்டிக்காட்டினார்

### 'நான் அப்படிக் கூறவில்லையே' என்றார் தலைமையமைச்சர் இந்திரா

மதுரை, ஆக. 24—

மொழிப் பிரச்சினை குறித்துச் சென்னையில் செய்தியாளர்களிடம் தலைமையமைச்சர் இந்திரா காந்தி வெளியிட்ட கருத்து, தமிழக மக்களுக்கு—குறிப்பாக மாணவர்களுக்கு எரிச்சலை மூட்டியிருப்பதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள், இந்திரா காந்தியிடம் சுட்டிக்காட்டினார்.

திருமதி இந்திரா காந்தி, தாம் சொன்னதைச் சரிவர [illegible] தம் கருத்தை விளக்கினார்.

"இந்தி படிக்காதவர்கட்கு எங்குமே வேலை கிடைக்காது என்று நான் சொல்லவில்லை. இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வேலைபார்ப்பவர்கள் அந்தந்தப் பகுதியின் மொழியை அறிந்திருக்க வேண்டும் என்று நடைமுறையில் இருப்பதைத்தான் சுட்டிக்காட்டினேன். புதிதாக எதையும் சொல்லவில்லை" என்று இந்திரா காந்தி அண்ணாவிடம் கூறினார்.

### ஆட்சிமொழிச் சட்டம்

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா, நாடாளுமன்றத்தின் அடுத்த தொடர்க் கூட்டத்தில் கொண்டுவரப்படும் என்றும் போதிய அவகாசமின்மையால் தான் கடந்த தொடர்க் கூட்டத்தில் கொண்டுவர முடியவில்லை என்றும், வேறு உள்நோக்கம் எதுவுமில்லை என்றும் இந்திரா காந்தி விளக்கினார்.

ஆங்கிலத்தையோ, இந்தி பேசாத மக்களுக்கு முந்திய தலைமையமைச்சர்கள் அளித்த உறுதிமொழிகளையோ புறக்கணிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும், இணைப்பு மொழி ஒரே மொழியாக இருக்கவேண்டும் என்பது பற்றியே தமது கவலை என்றும் அவர், அண்ணாவிடம் கூறினாராம்.

"தலைமையமைச்சர் அண்மையில் ஆதரித்துள்ள மும்மொழித் திட்டம், அண்மைக்காலம் வரை மேற்கொண்டிருந்த மொழிக் கொள்கையில் ஒரு மாறுதலா?" என்று அண்ணா கேட்டதற்கு, 'நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா?' என்று திருப்பிக் கேட்டிருக்கிறார் தலைமையமைச்சர்.

"ஆங்கிலம் கட்டாயமாக நீடிக்கச் செய்ய இந்திக்காரர்களை இணங்கவைப்பது எனக்குப் பெரும்பாடாக இருக்கிறது" என்றும் இந்திரா, அண்ணாவிடம் எடுத்துரைத்திருக்கிறார்.




நான்காம் பொதுத் தேர்தலுக்குப்பின் வந்த இருபதாவது விடுதலை நாள் விழா முதல் இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள், 'சுதந்தரம், சுதந்தரம்' என்று—நிமிடத்துக்கு நிமிடம் கூறுகிறார்கள்.

ஆனால், நானும் பார்க்கிறேன்—'சனநாயகம்' என்று சொல்லி, 'அதைக் காப்போம்' என்று எந்தக் காங்கிரசுக்காரராவது சொல்வாரா? என்று! யாரும் சொல்லக் காணோம்! 'மக்களே இல்லாமல் ஆட்சிக்கு வருவது எப்படி?' என்ற ஆராய்ச்சியில் இருக்கிறார்களாம் அவர்கள்!

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 9 (25—8—67) வெள்ளி

# குருவும் சீடர்களும் விதைக்கும் நாசம்!

அரசியல் சுதந்தரத்தை இந்தியத் துணைக்கண்டம் பெற்ற நாளில் இருந்துவந்த காங்கிரசுக் கட்சி இன்று இல்லை. இன்றுள்ள காங்கிரசுக் கட்சி, பெரும்பான்மையான மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டிருக்கிறது!

இருபதாண்டுக்காலமாகத் தொடர்ந்து பதவியிலிருந்ததால் மட்டுமே காங்கிரசுக் கட்சியை மக்களில் பெருந்தொகையினர் ஒதுக்கித் தள்ளிவிட்டனர் என்பதில்லை. இருபதாண்டுக்காலமாகப் பதவியிலிருந்துவந்தும்கூட, தான் வாக்களித்தவண்ணம், மக்களின் தேவைகளை நிறைவு செய்யத் தவறியதே காங்கிரசுக் கட்சியின் வீழ்ச்சிக்கு மூலகாரணமாகும்.

அனைத்திந்திய மட்டத்திலும் சரி—மாநில மட்டத்திலும் சரி—காங்கிரசுக் கட்சிக்குள் பிளவும் பேதமும் மண்டிக்கிடக்கின்றன! இப்பிளவும் பேதமும், கீழ்மட்டத்திலிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினரிடம் மட்டுந்தான் காணப்படுகின்றன என்பதில்லை. காங்கிரசு மேல்மட்டத் தலைவர்களும், அவ்விரண்டிற்கும் ஆட்பட்டுத்தான் உள்ளனர்.

காங்கிரசுக் கட்சியை அரித்துக்கொண்டிருந்த இந்தப் பேதமும் பிளவும் வெளியில் தெளிவாகத் தெரியாமலிருந்திருக்கிறது. இதற்குக் காரணம், காங்கிரசுக் கட்சி தொடர்ந்து பதவியிலிருந்து வந்திருப்பதே ஆகும்.

பதவி பறிக்கப்பட்டவுடன், அந்த ஒன்றை மட்டுமே நம்பி வாழ்ந்துவந்த காங்கிரசுக் கட்சியும், எதிர்பார்த்ததைவிடத் தீவிரமாக விரைந்து சரியத் தொடங்கிவிட்டது! இப்படி, தங்கள் கண்முன்னலேயே காங்கிரசுக்கு ஏற்பட்டுவிட்ட சரிவையும் வீழ்ச்சியையும் தாங்கிக்கொள்ள முடியாமல் காங்கிரசுத் தலைவர்கள் எனப்படுகின்றவர்கள், அக்கட்சிக்கு மீண்டும் வலிவூட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

காங்கிரசுக் கட்சிக்கு மீண்டும் வலிவூட்ட, தலைவர்கள் எனப்படுகின்றவர்கள் விரும்புவதும் முயற்சிப்பதும் இயல்பாகும் என்பதுடன், வரவேற்கத்தக்கதுமாகும். இழந்துவிட்ட பொதுமக்களின் ஆதரவை மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குப் பெற்றுத்தர அத்தலைவர்கள் மேற்கொள்ளக்கூடிய முயற்சியில் கண்ணியமும் கனிவும் [illegible], வன்முறைக்குத் தூபமிடக்கூடியதாகவோ, காங்கிரசுக் கட்சிக்கு அவர்கள் ஆதரவு தேடும் பணி அமைந்திடக்கூடாது.

ஆனல், காங்கிரசுத் தலைவர்கள் எனக் கொள்ளப்பட்டிருக்கின்றவர்களின் பேச்சு, நாட்டின் அமைதியைக் குலைக்கக்கூடியதாக அமைந்திருக்கிறது. அரசியல் கட்சி ஊழியர்களிடையில் ஏதாவது மனக்கசப்பு இருந்திடும்பட்சத்தில், அதை இல்லாதொழிக்கத் துணிய வேண்டிய காங்கிரசுத் தலைவர்கள் என்பவர்கள், அதை மென்மேலும் வளர்த்துவிடுவதிலேயே முனைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில் கொந்தளிப்பையும் குழப்பத்தையும் உண்டாக்கத் தக்கவகையில், எவர் பேச்சும் இருந்திடக்கூடாது. தங்களையும் அறியாமல் பேசக்கூடிய பேச்சாகக்கூட ஒருவர் பேச்சு இருந்திடக் கூடாது.

திட்டமிட்டுக் குழப்பத்தை உருவாக்கிவிட்டு, அக்குழப்பத்திற்கு ஆளுங்கட்சியின் மீதோ அல்லது வேறு ஓர் அரசியல் கட்சியின் மீதோ பழியைச் சுமத்தி, அந்தக் கட்சியைத் தூற்றுவதற்கான வாய்ப்பைத் தேடிக்கொண்டு, அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் குழப்பத்தை விரிவுபடுத்தத்தக்க முறையில் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதில் காங்கிரசுத் தலைவர்கள் என்பவர்கள் அனைவரும் வல்லவர்கள். இந்த வல்லவர்கள் அனைவரிலும் தலைசிறந்து விளங்குபவர் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவராக உயர்த்தப்பட்டிருக்கின்ற காமராசர் ஆவார்.

சென்னை நகரத்தில் சில நாட்களுக்குமுன், கருத்து நாளிதழ் ஒன்றை, அப்பெருந் தலைவர் துவக்கி வைத்தார். அவர் அப்பொழுது, பயங்கரமான விளைவுகளைக் கொண்டதோர் கருத்தை வெளியிட்டிருந்தார். அக்கருத்தை அப்பொழுதே இப்பகுதியில் வெளியிட்டிருக்கின்றோம்.

காங்கிரசுப் பெருந்தலைவரைப் பின்பற்றிக் கீழ்த்தரமான எழுத்தால் காங்கிரசுக் கட்சியைச் சீர்குலைத்துவிட்ட 'காங்கிரசு ஏடுகள்' அதே பயங்கரமான கருத்தைப் பல்லவியாகப் பாடுவதற்குக் கிளம்பியுள்ளன! தங்கள் அண்டப்புளுகுப் பேச்சால் காங்கிரசுக் கட்சியில் இடம் பற்றிக்கொண்டிருக்கின்ற சில நற்குணவான்களும், அப்பல்லவியை இசைக்கத் துணிந்துள்ளனர்!

**"நமது பொருள் திருட்டுப் போனல், நாம் போலீசில் 'கம்ப்ளேயின்ட்' செய்யணும். போலீசு நடவடிக்கை எடுக்கல்லன்னு, நாமே போலீசாக மாறிடணும்! நான்தான் முனனேயே சொல்லியிருக்கனே!"**

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவரின் உபதேசம் எப்படி? 'காங்கிரசுக் கட்சியினர் ஒவ்வொருவரும், போலீசுக்காரராக மாறிவிட வேண்டும்' என்கிருர் காங்கிரசுத் தலைவர்!

**இந்த உபதேசத்துக்கு என்ன பொருள்? ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னேற்றக் கழகத்தினர் உட்பட மற்ற அரசியல் கட்சியினர் அனைவரையும், 'உதையுங்கள்—அடியுங்கள்—குத்துங்கள்—வெட்டுங்கள்'—என்பதுதானே பொருள்?**

இந்த நச்சுக் கருத்தை, இன்றுதான் முதன்முதலாக அருங்குணத் தலைவர் காமராசர் கூறியுள்ளார் என்று எவரும் தவருகவும் எண்ணிக்கொள்ளாதீர்கள்! 'நான்தான் முன்னேயே சொல்லி இருக்கனே' எனக் கூறியிருப்பதன் மூலம், இந்த நச்சுக் கருத்துக்கு முன்னுரிமையும் பாராட்டி இருக்கின்ருர், அப்பெருந்தகை!

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர், காங்கிரசுக் கட்சியினரைப் போலீசுக்காரராக மாறச் சொன்ன அதே நேரத்தில், மற்றொரு கருத்தையும் கூறியிருக்கின்ருர் :—

**"தட்டியில் எழுதலாம்; எழுதுவதற்கு உரிமையிருக்கு; ஏதாவது தப்பா எழுதி இருந்தா கேஸ் போடு."**

காங்கிரசுக் கட்சியினர் எழுதி வைக்கின்ற தட்டிகளில் எதிர்க் கட்சியினரைக் குறித்து ஏதாவது கீழ்த்தரமாக எழுதி வைத்திருந்தால், அதற்கு எதிர்க் கட்சியினர் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? காங்கிரசுத் தலைவர் உபதேசம் செய்திருப்பதற்கொப்ப, காங்கிரசுக் கட்சியினர் போலீசுக்காரராக மாறிவிடுவதைப்போல், எதிர்க் கட்சியினரும் போலீசுக்காரராக மாறிவ்டக் கூடாது. அப்படிப் போலீசுக்காரராக மாறக்கூடிய உரிமை காங்கிரசுக் கட்சியினருக்கு மட்டுந்தான் உண்டு. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அந்த உரிமை கிடையவே கிடையாது!

எதிர்க் கட்சியினருக்குள்ள உரிமை எது தெரியுமா? கீழ்த்தரமாகத் தட்டி எழுதி வைத்திருப்பவர்கள்மீது சட்டப்படி **கேஸ் போட வேண்டும்!**

எதிர்க் கட்சியினருக்கு, 'கேஸ் போட வேண்டும்' என அறிவுரை கூறியுள்ள காங்கிரசுப் பெருந்தலைவர், காங்கிரசுக் கட்சியினருக்கும், 'கேஸ் போட வேண்டும்' என்ற அறிவுரையைக் கூறியிருக்கும்பட்சத்தில், அவருடைய அரசியல் நேர்மையை நாடு தெரிந்துகொண்டு, அவரைப் பாராட்டியிருக்கும். ஆனல் காங்கிரசுத் தலைவரோ, சொந்தக் கட்சியினருக்கு ஒரு முறையையும், மற்ற அரசியல் கட்சியினருக்கு வேறு ஒரு முறையையும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

காங்கிரசுக் கட்சியினர் என்பவர்கள், இப்பொழுது வெறும் கட்சிக்காரர்களாக இருக்கின்றபொழுதே, 'கூரை ஏறித் தீ வைக்கின்ற நல்ல பிள்ளை'களாக உலவிக்கொண்டிருக்கின்றனர் என்ருல், காமராசர் உபதேசப்படி போலீசுக்காரர்களாக மாறிவிடும் பட்சத்தில், மாடமாளிகைக்குமல்லவா தீ வைத்திடக்கூடிய நாசகாலர்களாக உலவத் துணிந்துவிடுவர்? அந்த அவலநிலை நாட்டுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது. மக்கள் விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் செயல்பட்டு வரவேண்டும்.

காங்கிரசுக் கட்சியினரின் குருநாதர், தமிழகத்தைக் குழப்பத்துக்குள்ளாக்கும் நாசக் கருத்தைக் கோடிட்டுக் காட்டிவிட்டார். குருநாதரின் நாசக் கருத்தை, தங்கள் எழுத்தாலும் பேச்சாலும் எதிரொலிக்கத் துவங்கிவிட்டார்கள்—காங்கிரசுப் பொடித் தொண்டர்கள்!

**' இனி நாம் போலீசை நம்பிப் பயனில்லை; இனி நாமே போலீசாக மாறி நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்."**

இப்படி, ஒரு தற்காலிகக் காங்கிரசுப் பேச்சாளர், காமராசரின் நாசக் கருத்தை எதிரொலித்துள்ளார்!

" களத்தில் இறங்கும்போது கழகக் காலிகளுடன் போலீசாரும் சேர்ந்துதான் வருவார்கள்! அதைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காங்கிரசுத் தொண்டர்களுக்கு ஏற்படும். இது தவிர்க்க முடியாதது."

**" போலீசார்மீது விழும் ஒவ்வொரு அடியும், இந்தத் தேசத்தின்மீது விழும் அடியாகும்.**

**" இந்த நிலை ஏற்படக்கூடாது. இந்தத் தேசத்துக்கு நல்லதல்ல—ஆபத்தானது—அவமானகரமானது!"**

**" ஆனல் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அது நடக்கத்தான் செய்யும்! அது தவிர்க்க முடியாதது! யாராலும் தடுக்க முடியாதது!"**

இப்படி எழுதியிருப்பதன் பொருள் என்ன? போலீசுக்காரரைக் காங்கிரசுத் தொண்டர்கள் தாக்குவார்கள்—தாக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள்; இது தவிர்க்க முடியாதது—தடுக்கவும் முடியாதது—இதுதான் பொருள், ஏட்டின் கூற்றுக்கு!

போலீசுக்காரரையும் தாக்குவதற்குக் காங்கிரசுத் தொண்டர்கள் எடுத்திருக்கின்ற முடிவினைத் தவிர்க்க முடியுமா? அதை யாரால் எப்படித் தவிர்க்க முடியும்?

கீழே படியுங்கள் - அந்த ஏட்டின் ஆசிரியர் அறிவித்திருக்கின்ற அருமுறையை :—

**" இதற்கு உடனடியாகப் பரிகாரம் கண்டாக வேண்டும். அதைப் போலீசார்தான் செய்ய வேண்டும்."**

அந்தப் பரிகாரம் என்ன? அதை எப்படிப் போலீசார் நிறைவேற்ற வேண்டும்? ஆசிரியர் கூறுகின்ருர் முறை :—

**" போலீசுக்காரர்களெல்லாம் ஒன்ருகச் சேர்ந்து, 'நாங்கள் பாரபட்சமற்ற முறையில் கடமையைச் செய்ய அனுமதிக்க வேண்டும்; அதுவரை வேலைக்குப் போவதில்லை' என்று ஐ. ஜி.-க்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்."**

போலீசுக்காரர் அனைவரும், 'வேலைநிறுத்தம் மேற்கொள்ள வேண்டும்' என்ற நல்லுரையை நல்கியுள்ளார், ஆசிரியர்!

இத்தொடர்பில் மேலும் அவர் எழுதியிருப்பதாவது :—

**" 'மேலதிகாரிகளே பாரபட்சமின்றி நடக்க முடியவில்லையே! நாங்கள் மட்டும் என்ன செய்ய முடியும்' எனப் போலீசார் கேட்கலாம்."**

**" எப்போதுமே பெரிய மனிதர்களுக்கு மானம் கிடையாது; சாதாரண மனிதர்களுக்குச் சொந்தமான சொத்துதான் மானம்; எனவே, மானமுள்ள சாதாரண போலீசார்தான் இதைச் செய்ய வேண்டும்."**

போலீசு அதிகாரிகளுக்கு அவச்சொல்! போலீசுக்காரர்களுக்குப் புகழ்மாலை! ஒரே துறையைச் சேர்ந்த இரு பிரிவினரிடை, பிளவை விதைத்திருக்கின்ருர் ஆசிரியர்!

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

# ஏமாற்றத்தால் எரிச்சல்!

" காங்கிரசுக்காரர்கள் திட்டுகிருர்களே — என்று கவலைப் படத் தேவையில்லை!

காங்கிரசுக்காரர்கள் திட்டுகிருர்கள்—கோபப்படுகிருர்கள் என்ருல், அவர்கள் வேறு என்னதான் செய்வார்கள்?

ஆறு மாதத் தவணை தந்தார்கள்—'தவறு செய்யமாட்டார்களா, இந்த தி. மு. க. அரசிலுள்ளவர்கள்?' என்று திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்! எந்தத் தவற்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை அவர்களால்! பிறகு, 'நீங்கள் தவறு செய்ய மாட்டீர்களா? இதோ நாங்கள் செய்கிருேம்' என்று தவற்றை அவர்களே செய்யத் துவங்கினர்கள்!"

---அமைச்சர் மு. கருணாநிதி

(சென்னை 98-வது வட்ட கூட்டத்தில்)

# ஒரே கல்விக் கொள்கை ஆபத்தானது

## டாக்டர் இலட்சுமணசாமி கண்டனம்

புதுடில்லி, ஆக. 22—

" 50 கோடி மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் ஒரே மாதிரியான கல்விக் கொள்கை இருக்கவேண்டும் என்று நினைப்பது மிகவும் ஆபத்தான யோசனையாகும்"

என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, மத்திய கல்விக் கழகக் கூட்டத்தில் பேசுகையில் கருத்தறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

" 50 கோடி மக்களுக்கும் ஒரே மாதிரியான கல்வி போதனை முறை இருக்கவேண்டுமென்பது 50 கோடி மக்களுக்கும் ஒரே இடத்திலிருந்து உணவு ஊட்ட முயற்சிப்பது போன்ற ஆபத்தானதாகும்.

நாட்டின் இன்றைய நிலைமையில், தேசிய ஒருமைப்பாடும் ஒற்றுமையும் முக்கியமானதாகும். இன்றைய மாணவர்களிடம் காணப்படும் போராட்ட மனநிலையையும் மறந்துவிடக் கூடாது.

பல மாநிலங்களிலும் மாறுபட்ட அரசியல் கொள்கையுடையவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால், அவைகளின் கல்விக் கொள்கைகளும் மாறுபட்டதாகவே இருக்கும். கல்விக் கொள்கையை உருவாக்கும் பணியை, கல்வி அமைச்சர்களிடமில்லாமல் ஆசிரியர்கள்—அனுபவமிக்கவர்கள்—மற்றும் பெற்ருேர்களிடம் விட்டுவிடவேண்டும்.

கல்வியில்—குறிப்பாக அடிப்படைக் கல்வியிலும், நடுநிலைக் கல்வியிலும் மந்தப் போக்கை உண்டாக்கும் எந்த முயற்சியிலும் அரசாங்கம் இறங்கக் கூடாது.

அடிப்படைக் கல்வி ஆசிரியர்களுக்கு இன்னும் வசதிகளைச் செய்துதர வேண்டும். அவர்களின் ஊதியம் அரசாங்கக் கடைநிலை ஊழியர்கள் பெறுவதைவிடக் குறைவாக உள்ளது.

நாடு ஆபத்தான நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் மத்திய அரசு, நாட்டு ஒற்றுமையைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும்; ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கெடுக்கும் எந்தச் செயலையும் செய்யக்கூடாது!

கடந்த 20 ஆண்டுக் காலமாக நான் இந்தக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு வருகிறேன். பேச்சளவில் நாம் தாராளமாகவே நடந்துகொண்டு வருகிருேம்; ஆனல் சொன்னதைச் செயல்படுத்துவதில் நாம் திருப்திகரமாக நடந்துகொள்ளவில்லை."

# 'உற்பத்தி பெருக விஞ்ஞான முறை அவசியம்'

### அமைச்சர் மாதவன் கருத்து

கோவை, ஆக. 21—

"நமது நாட்டில் தொழில்துறையில் மட்டும் ஆராய்ச்சி நடக்கிறது. இந்தியா வளம்பெற வேண்டுமானால் விவசாயத்தில் ஆராய்ச்சியாளர்கள் மேலும் மேலும் கவனம் செலுத்த வேண்டும். எல்லாத் துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்க விஞ்ஞான முறை அவசியமாகும்"

என்று அமைச்சர் செ. மாதவன், உற்பத்தித் திறன் குழுவின் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தொழில் நிறுவனங்களிலும் ஆய்வுக்கூடங்களிலும் செய்யப்படும் ஆராய்ச்சிகளின் பலன்கள் ஒவ்வொரு வீதிக்கும் வீட்டுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

அந்நிய நாடுகளில் தொழில் நிறுவனங்களுக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதி ஆராய்ச்சிக்கென ஒதுக்கப்படுகிறது; அது நமது நாட்டில் இல்லை. உலகில் தொழில்துறையில் போட்டியிடும் சக்தி பெற நமது தொழில் நிறுவனங்கள் ஆராய்ச்சிக்கென அதிகம் செலவு செய்யவேண்டும்.

### கூட்டுப் பொறுப்பு தேவை

உற்பத்தியைப் பெருக்குவது, நிர்வாகம்—தொழிலாளர் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாகும். தொழிலாளர் விரோதக் கொள்கைகளை நிர்வாகம் கைவிட வேண்டும்; 'தொழிலில் தொழிலாளருக்குப் பங்கு உண்டு' என்பதை நிர்வாகம் காட்ட வேண்டும்.

தங்கள் தொழிலில் தாங்கள் ஒரு அங்கம் என்பதையும், தொழிலின் செழிப்பைப் பொறுத்துத் தங்கள் முன்னேற்றம் இருக்கிறது என்பதையும் தொழிலாளர்கள் உணர வேண்டும். விஞ்ஞான முறைகள் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதில் நிர்வாகத்துடன் முழுமனதுடன் தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்."

# காந்தி சீடர்கள் ஆளும் மாநிலத்தில்...!

பெங்களூர், ஆக. 23—

செப்டம்பர் திங்கள்முதல் சரு நாடக மாநிலம் முழுவதிலும்—பிதார் மாவட்டம், மற்றும் ஆறு வட்டங்கள் தவிர—மதுவிலக்கு நீக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையினால், இந்த ஆண்டு மீதமுள்ள எட்டு மாதங்களில் மூன்றரை அல்லது நான்கு கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மது வகைகளை விற்பதற்கான கடைகள் எப்போதும்போல் ஏலத்தில் விடப்படும்.

கள், பட்டைச் சாராயம் இரண்டையும் முத்திரையிடப்பட்ட புட்டிகளில் விற்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்ய அரசு எண்ணியுள்ளதாம்.

மலிவான மது வகைகள் விற்பனை பற்றியும் கவனிக்கப்பட்டு வருகிறதாம்.

# கல்லறை உருவாகிறது மா-சே-துங்குக்கு !

மெர்லின், ஆக. 25—

சீனக் கம்யூனிஸ்டுக் கட்டுமானச் சிற்பிகள், தங்கள் தலைவர் மா-சே-துங்குக்காக ஒரு கல்லறையைக் கட்டி வருவதாக, இங்கு கம்யூனிஸ்டுத் தூதரக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அதற்கான வடிவமைப்புப் படத்தை மா-சே-துங்கே தயாரித்திருக்கிறார். தமது கல்லறையை ஒருவர் தமது வாழ்நாளிலேயே கட்டிக்கொள்வது சீனரின் வழக்கமாகும்.

இவ்வாண்டு இறுதியில் மா-சே-துங்கின் கல்லறை முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்த நாடு இந்திக்காரர்களுக்குத்தான் சொந்தமா?

## தேச விரோத மொழிக் கொள்கை விசுவரூபம் எடுத்துள்ளது!

### இந்தியா ஒரே நாடாக நிலைக்குமா?

"கல்வித் துறையில் ஆங்கிலத்தை அழிப்பது, ஆட்சித் துறையில் இந்தியைத் திணிப்பதற்குத்தான் என்பது இப்பொழுது சந்தேகமறப் புலனாகிவிட்டது! இது தேசமெங்கும் பரவலாக ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் தோற்றுவிக்க வல்லது!

"இந்தத் தேசம் இந்திக்காரர்களுடைய உடைமையல்ல; இது எல்லா மாநிலத்தவருக்கும் சொந்தமானது!

"இந்தி பேசுவோர் சுமார் நாற்பது சதவிகிதத்தினர்தாம். சேர்ந்தாற்போல் உள்ள ஐந்து மாநிலங்களில் இந்தி பேசுவோர் வசிக்கிறார்கள்; அவர்களுக்கு இன்று செல்வாக்கு இருக்கிறது என்ற காரணத்தால், அதைப் பிறர் மீது திணிக்கின்ற சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன! இது பிறருக்கு ஆத்திரமூட்டக்கூடிய முயற்சி!"

என்று, 'தினமணி' (சென்னை 12—8—67) இதழில் 'மறைமுகத் திணிப்பு' என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

புதிய கல்விக் கொள்கை' என்பதன் பெயரால், இந்தி பேசாத மாநிலத்தவர் மீது அம்மொழியை மறைமுகமாகத் திணிக்கும் திட்டமொன்று டில்லியில் உருவாகியுள்ளது. அதன் விவரங்களைப் பார்க்கையில், 'இந்த நாட்டுக்கு நல்ல எதிர்காலம் உண்டா? தேசமே ஒருறுப்பாக நிலைத்திருக்குமா? வேகமான வளர்ச்சிக்கு இனி வழியிருக்குமா?' என்ற கவலை, சான்றோருக்கு ஏற்படத்தான் செய்யும்.

"காலேஜ் படிப்பில் ஆங்கிலம் இன்னும் ஐந்து வருடந்தான் போதன மொழியாக இருக்கலாம்; அதற்குள் வட்டார மொழியில் போதனைக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும்" என்பது, யூனியன் மந்திரி சபை செய்துள்ள முதல் முடிவு என்று கூறப்படுகிறது.

"தொழில்முறைக் காலேஜுகளிலும், இதே கொள்கையைப் பின்பற்ற வேண்டும்" என்பது இரண்டாவது முடிவு.

மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் நடைபெறும் சாதாரண கல்லூரிகளிலும் தொழில் முறைக் கல்லூரிகளிலும்—அவை தேசத்தின் எப்பகுதியில் இயங்கினாலும்—போதனை, இந்தியில்தான் நடைபெறும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

"போதன மொழியாக ஆங்கிலம் நீடிப்பதை நாங்கள் விரும்பவில்லை" என்று, புதிய கொள்கைக்குக் 'காரணம்' கூறியிருக்கிறார்—யூனியன் கல்வி மந்திரி.

எனவே, நிலைமையின் தேவைக்கு மதிப்புத் தராமல், விருப்பு—வெறுப்பு அடிப்படையில், இந்திக்காரர்கள் மொழி விஷயத்தில் முடிவுகட்டப் பார்க்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இரண்டு அடிப்படைப் பிரச்சினைகள் எழுகின்றன. மொழி பற்றிய முடிவுகள் எல்லாமே இப்பொழுது இருந்துவரும் நிலவரத்துக்கு அடியோடு சம்பந்தமில்லாதவை.

இப்பொழுது ஒரு சில இடங்களில் ஒரு சில பாடங்கள் தவிர, பொதுக் கல்லூரிகளிலும், தொழில்முறைக் கல்லூரிகளிலும் போதனை ஆங்கிலத்தில்தான் நடந்துவருகிறது.

பிராந்திய மொழி அல்லது இந்தியில் போதனை அளிப்பதற்கு ஐந்து வருடமல்ல—பத்து வருடம் கூடப் போதாது! இதற்குக் காலவரம்பே கட்ட முடியாது!

அறிவியல் துறைப் படிப்பு சம்பந்தப்பட்டவரை, வெளியுலகின் வளர்ச்சிக்கு இசைவாக நம் நாட்டில் ஏற்றம் கண்டாக வேண்டும். அது சரிவர நடைபெற வேண்டுமாயின், நெடுநாளைக்கு ஆங்கிலத்தில் போதனை நிச்சயமாகத் தேவை. அதை, துணை நூல்களைப் படிப்பதற்கு வேண்டிய 'புத்தகாலய மொழி'யாகத் தாழ்த்த விரும்புகிறார் கல்வி மந்திரி. இது, கல்வித் துறைக்கே பெருங்கேடு என்பதில சந்தேகமில்லை!

பிராந்திய மொழிகளிலும், இந்தியிலும், இஷ்டப்படுவோர், கல்லூரிப் படிப்பைப் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே போவதுதான் அறிவுடைமையாகும். அப்பொழுதுதான் நல்ல தகுதியுடன் கூடிய உயர் கல்வியை இந்திய மொழிகளில் பெற இயலும்.

ஆங்கிலத்தில் போதனை பெறுவதற்கான வாய்ப்பு வசதிகள், தேவையுள்ள வரை, படிக்க விரும்புவோரின் விருப்பத்துக்கு ஏற்பத் தொடர்ந்து நீடிக்கத்தான் வேண்டும். அதற்கு இடமில்லாமல் செய்யும் எந்த ஏற்பாடும், 'தேச விரோதத் திட்டம்' என்றுதான் மதிக்கப்பெறும்.

மந்திரக்கோலை அசைத்து, 'ஐந்து வருடத்தில் போதன மொழி அடியோடு மாறும் அற்புதத்தை நிகழ்த்திவிடலாம்' என்று சொல்வதைப் போன்ற புரட்டுப் பேச்சு இருக்க முடியாது.

உயர் கல்வி தரமானதாக—நிலைமையின் தேவைக்கு ஏற்ப அமைந்து, தேசம் ஒருறுப்பாக இருந்துகொண்டு நல்லபடி முன்னேறவேண்டும் என்று விரும்புகிற ஒரு மந்திரிசபை, இப்படி ஒரு சர்வ நாசத் திட்டத்தைக் கொண்டுவரலாகாது!

தேச அபிவிருத்தியையும், மக்களின் இடையறுத முன்னேற்றத்தையும்விட, ஆங்கிலத்தைக் கல்வித் துறையிலிருந்து விரைவில் விரட்டியடித்து விடுவதுதான் புதுக் கொள்கையின் நோக்கமென்பது தெளிவாகிவிட்டது!

'இந்தி அபிமானிகள்' எனப்படுவோரின் போதன மொழித் திட்டம்—அவர்கள் விரும்பும் வகையில் இந்தி ஒன்றையே ஆட்சி மொழியாகவும், போகப் போக இந்தியாவெங்கும் கல்லூரிப் படிப்பில் போதன மொழியாகவும்கூட, இந்தி பேசாதவர்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டிய நிர்ப்பந்த நிலைமை வந்துவிடும். இது வெறும் கற்பனை அல்ல—வீண் காபரா அல்ல! அப்படி நடக்க வேண்டும் என்று திட்டமிட்டு இந்திக்காரர்கள் வேலை செய்கிறார்கள்! அவர்களுடைய செல்வாக்கிற்குப் பயந்துபோய், புதுக் கொள்கையை உருவாக்கி இருப்பதைப் பார்த்தால், பிரதம மந்திரிக்குக்கூட தடுமாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது!

கல்வித் துறையினரும், மாணவர்களும் ஆங்கிலத்தில் போதனையையே விரும்புவதாக பிரதம மந்திரி, பார்லிமெண்ட் மெம்பர் பிராங்க் அந்தோணியிடம் ஒப்புக்கொண்டார்; ஆனால். 'இந்தியே ஏக ஆட்சி மொழியாக வரவேண்டும்' என்பது கொள்கையாகையால், ஆங்கிலத்தில் கல்வி போதனையை எடுத்துவிட வேண்டி ஏற்படுவதாகப் பிரதமர் சொன்னாராம். இது, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாகப் பயன்படுவதைப் பற்றி நேரு அளித்த வாக்குறுதிக்கு முற்றிலும் மாறுபட்டது.

ஆட்சி மொழியை எடுத்துக்கொள்ளுவோம்; 'ஆட்சி மொழிக்கு ஒரு கொள்கை—போதனை மொழிக்கு ஒரு கொள்கை என்ற நிலவரம், ஒரே சமயத்தில் தொடர்ந்து அமுல் நடப்பது சாத்தியமல்ல!

இப்பொழுது தேசமெங்கும்அகில இந்திய ஆட்சி மொழியாக இருந்துவருவது ஆங்கிலம்; அதுவே பிரதான போதன மொழியாகவும் இருந்துவருகிறது.

ஆட்சி மொழி அந்தஸ்தை இந்திக்கும் அளிப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன; அவை ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றன.

இந்தி படிப்படியாகத்தான், எல்லா மாநிலங்களின் இணக்கத்துடன்கூட, ஆட்சித் துறையில் ஏற்றம் காண இயலும்! அதற்கு முயலுகையில், இந்தி மாநிலத்தவர், அகில இந்தியத் துறைகளில் ஆதிக்கம் செலுத்திப் பிற மொழியினர் பின்தங்கி விடும்படி நேரிட்டுவிடலாகாது என்பதற்காகத்தான், 'ஆட்சி மொழிக் கொள்கையை உருவாக்கி அமுல் நடத்துவதில் நிதானம் தேவை' என்பது வற்புறுத்தப்பட்டது.

அகில இந்திய சர்வீசுகள் உட்பட யூனியன் சர்க்காரின் பணிகளில் சமவாய்ப்பு வசதிகளுடன் பிற மொழியினர் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் 'இந்தி பேசாதார் வேண்டும்வரை ஆங்கிலம் அகில-இந்திய ஆட்சி மொழியாக நீடித்து இருந்துவர வேண்டும்' என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அரசியல் சாசனத்தைத் திருத்தி இந்த அபயத்தை அளிப்பதாக நேரு வாக்களித்தார்; ஆனால் அதன்படி இதுவரை நடைபெறவில்லை.

ஆட்சி மொழிக் சட்டத்துக்குத் திருத்தம் செய்து அதன் மூலம் வாக்குறுதியைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு காலம் கடத்திவருகிறார்கள்.

இதற்கிடையே, 'ஆட்சி மொழி' என்று பேசாமல், 'இணை மொழி' என்று யூனியன் அரசாங்கம் குறிப்பிட்டு வருவதும், அது 'இந்தியாகத்தான் இருக்க முடியும்' என்று கல்வி மந்திரி கூறுவதும், ஆங்கிலத்தை ஐந்தாண்டுகளில் போதன மொழி நிலையிலிருந்து விரட்டிவிடப் போவதாக அவர் மார் தட்டுவதும், இந்தி பேசாதவர்களுக்கு ஒரு பெரிய அறைகூவலாகும்.

'யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை எல்லா மொழிகளிலும் எழுதலாம்' என்ற 'சலுகை'க்கு இந்திக்காரர்கள் இணங்கிய போதே, அவர்களுடைய தந்திரத்தைப் பிறர் உணர்ந்து கொள்ளாது போனதன் விளைவாகத்தான், தேசவிரோதமான மொழிக் கொள்கை இன்று 'விசுவரூபம்' எடுத்துள்ளது!

புதுக் கொள்கையின் அபாயத்தை உணர்ந்து—மக்களை எச்சரித்து—இந்திய சர்க்காரை சரியான வழிக்குத் திருப்பியாக வேண்டும்!

பொது வாழ்விலும், பதவிப் பொறுப்பிலுமுள்ள பெருந் தலைவர்களது கடமை இது என்பதை விளக்கத் தேவையில்லை!"

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதைத் தொடர்ந்து, போலீசுக்காரரை மேலும் ஆசிரியர் தூபமிட்டிருக்கின்றார் :—

"அவர்கள் குடும்பக் கஷ்டம் நமக்குப் புரிகிறது! அதே நேரத்தில், இந்த நாட்டில் நாய்கூடச் சோறு தின்னுகிறது என்பதையும் அவர்கள் (போலீசுக்காரர்கள்) புரிந்துகொள்ள வேண்டும்."

இந்த உபதேசம் போலீசுக்காரர்களுக்கு மட்டுந்தான்; இதே உபதேசத்தைச் சொந்தத்தில் பின்பற்ற ஆசிரியர் விரும்பமாட்டார்!

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்முதல் ஏடு எழுதும் எழுத்தாளர்கள்வரை, தமிழகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் காத்து வருகின்ற—இதுவரை உலகம் கண்டறியாத நூதன முறை இதுதான்! தமிழ் மக்கள், இந்த நல்லவர்களின் திருப்பணியை, மேலும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

—கா. க.

# ஸ்டாலின்மகளின் உலகச் சாதனை!

இலண்டன், ஆக. 25—

"ஸ்டாலினின் மகளான ஸ்வெட்லானா, தனது புத்தகத்தின் உரிமையை விற்றுள்ளதன் மூலம், இதுவரை இல்லாத அளவுக்குப் பெரும் பணம் பெற்றுள்ளார்"

என்று, இலண்டன் 'ஈவினிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகை தெரிதுள்ளது.

"இவ்வாண்டு ஏப்ரல் 20-ம் நாள் அவர், 15 இலட்சம் டாலர் (ரூ. 1 கோடியே 12 இலட்சம்) பெற்றார்" என்று அப்பத்திரிகையில் வெளியான ஒரு தகவல் கூறுகிறது.

"ஒரு புத்தகத்துக்கான உரிமைக்காக எந்த ஓர் எழுத்தாளருக்கும் இதுவரை கை மேல் இவ்வளவு தொகை அளிக்கப்பட்டதில்லை" என்று அப்பத்திரிகை கூறுகிறது.

# நெய்வேலியிலிருந்து மற்றொரு துணைப் பொருள்

### விற்பனைக்கு வருகிறது

சென்னை, ஆக. 25—

கோந்துகள், பூச்சிக்கொல்லிகள், நறுமணச் சரக்கு, தோல் பதனிடுதல் ஆகியவற்றுக்குப் பயன்படும் கலவை ஒன்றை, நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிக் கழகம் விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

அதற்கு, 'மெதா—பாரா கிரிசோல் கலவை' என்று பெயர்; அது நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியிலிருந்து பெறப்படும் துணைப் பொருளாகும்.

நெய்வேலிக் கழகத்தின் தார் உற்பத்திப் பிரிவு இப்போது வேலையைத் தொடங்கியிருக்கிறது. அங்கு கார்பாலிக் அமிலத்தைப் போன்றவை செய்யப்படும்.

# சென்னை மாநகராட்சி ஆரம்ப ஆசிரியர் சங்கம்

சென்னை மாநகராட்சி ஆரம்ப ஆசிரியர் சங்க 1967—68-ம் ஆண்டிற்கான நிர்வாகக் குழுத் தேர்தல் நடைபெற்றது. முதலாவது கோட்ட நிர்வாகக் குழு உறுப்பினராக கி. மா. பக்தவத்சலன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தற்போது சென்னை மாநகராட்சி ஊழியர் உதவி நிதி இயக்குநராகவும், தமிழ்நாடு ஆசிரியர்கள் நட்புறவுக் கழகத்தின் அமைப்புச் செயலாளராகவும், இராயபுரம் மையம் ஆசிரியர் சங்கத்தின் பொருளாளராகவும் இருந்துவருகிறார்.

தமிழகத்திற்குச் சர்க்கரை --- கோதுமை ஒதுக்கீடு

# 'அநீதி கூடாது' என அமைச்சர் கே. ஏ. மதியழகன் கோரிக்கை

## தலைமையமைச்சரின் தவருன கருத்துக்கு விளக்கம்

சென்னை, ஆக. 14—

"சர்க்கரை, கோதுமை ஒதுக்கீட்டில் தமிழகம் புறக்கணிக்கப் படுகிறது; தமிழகத்துக்கு நியாயம் கிடைக்கப் போதுமான ஒதுக்கீடு செய்யவேண்டும். தமிழகத்தில் சர்க்கரைப் பஞ்சம், கடுமையாக இருக்கிறது.

"பல மாநிலங்களிலிருந்து பல்வேறுவிதமான கோரிக்கைகளை எதிர்நோக்கியுள்ள மத்திய அரசை, மேலும் தொல்லைப்படுத்தக் கூடாதென நாங்கள் இருப்பதைக் கண்டு, 'சரிக்கட்டிக் கொண்டு போகிறீர்கள்—அடிக்கடி கேட்காததால்—வசதி யோடு இருக்கிறீர்கள்' என்று நினைத்துவிடக் கூடாது; ஆகவே, சர்க்கரை, கோதுமை ஒதுக்கீட்டில் அநீதி இழைக்கக் கூடாது; ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும்"

என்று, தமிழக உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் எடுத்துரைத்துக் கோரினர்.

"நீங்கள் வசதியாக இருப்பதாக அல்லவா நான் கேள்விப்பட்டேன்?" என்று தலைமையமைச்சர் கூறினர்; "'அதிகம் ஒதுக்குங்கள்' என்று அடிக்கடி நாங்கள் கேட்காததால்தான் இப்படி நினைக்கத் தோன்றுகிறது; அது தவறு; மத்திய உணவு அமைச்சருடன் நீங்கள் கலந்துரையாடி, தமிழகத்துக்கு நியாயம் கிடைக்கச் செய்யுங்கள்—போதுமான ஒதுக்கீடு செய்ய முயலுங்கள்" என்று கே. ஏ. மதியழகன் கூறினர்.

கவர்னர் மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போது, தலைமையமைச்சரிடம், மேலும் உணவு அமைச்சர் தெரிவித்ததாவது :—

"தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள சர்க்கரை ஒதுக்கீடு போதாது; வழக்கமாக இந்த மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டு வந்துள்ள சர்க்கரை ஒதுக்கீடு 16,000 டன்கள்; தற்போது அது, 9,000 டன்களாகக் குறைக்கப்பட்டுள்ளதால் மார்க்கெட்டில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் தொல்லைக்குள்ளாகியிருக்கின்றனர்.

சர்க்கரை ஆலைகளின் உற்பத்தியில் 40 சதவிகிதம்வரை பகிரங்க மார்க்கெட்டில் விற்க அனுமதிக்கப்பட்டுள்ளது; இதனுல் மார்க்கெட்டில் சர்க்கரை விலை ஏறக்கூடும்; ஆகவே கட்டுப்பாட்டிற்குட்பட்டு வராத இந்தச் சர்க்கரை விற்பனையை ஒழுங்குபடுத்த மாநில அரசுக்குப் போதிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

## கோதுமை ஒதுக்கீடு

சென்ற ஆண்டில் இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட 1½ இலட்சம் டன் கோதுமையில் ஐந்தில் ஒரு பங்குதான் கடந்த 7 மாதங்களில் கிடைத்துள்ளது. கோதுமை தட்டுப்பாடு காரணமாக அரிசிக்குத் தேவை அதிகரித்து விட்டது. ஆகவே, இம் மாநிலத்திற்கான கோதுமை ஒதுக்கீட்டை மத்திய அரசு அதிகரிக்க வேண்டும்.

மணிலா, கடலெண்ணெய், வெல்லம் ஆகியவற்றின் விலை இறங்க அவை பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதியாவதைத் தடை செய்ய வேண்டுமென்று இந்த மாநிலம் கோரி வந்துள்ளது. இக்கோரிக்கையை இன்னும் மத்திய அரசு நிறைவேற்றவில்லை. இவற்றுக்கு மாநில அரசு தடை விதிப்பதற்கு உதவியாக மத்திய அரசு, மீண்டும் இக்கோரிக்கை பற்றி ஆலோசிக்க வேண்டும்.

தமிழகத்தில் தீவிர உணவு உற்பத்தித் திட்டத்தை அமுல் நடத்தத் தமிழக அரசு ரூ 20 கோடி தரும்படி மத்திய அரசிடம் கேட்டது; இத்திட்டம் நிறைவேறினுல் உணவுத் துறையில் இம் மாநிலத்தின் தேவை நிறைவு செய்யப்படுவதுடன், பிற மாநிலங்களுக்கும் உணவு ஏற்றுமதி செய்யும் நிலைமை ஏற்படும்.

கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனித்து ஆவனசெய்வதாகத் தலைமையமைச்சர் உறுதி கூறினர்.

# ஊதிய உயர்வு கேட்ட ஊழியர்கள் வேலைநீக்கம்

### முதலாளியின் பழி வாங்கும் செயல்

சென்னை பாரத் தியேட்டர் தொழிலாளர்கள் 13 பேர் திடீரென வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டனர்.

சுமார் 15 ஆண்டுகளாக வாழ்க்கைக்குப் போதாத குறைந்த ஊதியம் பெற்றுவந்த தொழிலாளர்கள் ஊதிய உயர்வுகோரி தொழிற்சங்க மூலம் மனு அனுப்பினர். இந்தக் கோரிக்கை, அரசாங்க சமரச அதிகாரி முன்னிலையில் இருந்துவரும் தருணத்தில், கடந்த 15—8—67 இரவு மேற்படி 13 ஊழியர்களுக்கும் வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுக்கப்பட்டுவிட்டது.

"இதனை எதிர்த்து நீதி கோரிப் போராட ஆவன செய்வது குறித்து ஆலோசிக்கும்பொருட்டு 28—8—67 காலை 9-மணிக்கு சங்கக் கட்டிடத்தில், சங்கச் செயற்குழுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது" என்று தென்னிந்திய சினிமா ஊழியர் சங்க கௌரவச் செயலாளர் ஏ. சீனிவாசன் அறிவிக்கிருர்.

# பம்பாயில் வெ. கிருஷ்ணமூர்த்தி

### கழகத் தோழர்கள் வரவேற்பு

பம்பாய் நகரின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்கள்—தென்னவர்கள், வன்முறைச் செயலை மூலதனமாக வைத்து வெறியாட்டமாடி வரும் சிவசேனை இயக்கத்தவர்களால் பல இடங்களில் தாக்கப்பட்டு வருவதையும், பயமுறுத்தல் கடிதங்கள் பலருக்கு மொட்டையாக அனுப்பப்பட்டு வருவதையும் கண்டறியும் நோக்கத்துடன் பம்பாய் வந்துள்ள தி. மு. கழகப் பாராளுமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை 23—8—67 மாலை 6-30 மணிக்கு விமானக்கூடத்தில், பம்பாய் தி. மு. கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், ஆரியசங்காரன், த. மு. பொற்கோ, எம். சின்னப்பா உட்பட பலர் வரவேற்றனர்.

பொதுவுடைமைக் கட்சி சார்பில் வந்துள்ள தோழர் உமாநாத் அவர்கள், திங்கள் இரவு 11-30 மணியளவில் வந்திறங்கினுர்கள்.

பம்பாய் கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், ஆரியசங்காரன், த. மு. பொற்கோ, நெல்லைவளவன் ஆகியோர் விமானக்கூட வரவேற்பில் கலந்துகொண்டனர்.

# ஆறுகாட்டுத்துறை தீவிபத்து

### பாதிக்கப்பட்டோருக்கு உதவக் குழு

தஞ்சை மாவட்டம் ஆறுகாட்டுத்துறையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்காக 19-பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அதில் தி. மு. க. சார்பில் சிவ. கனகசுந்தரம் (மாவட்டப் பிரதிநிதி) அங்கம் வகிக்கிருர்; அதன் துணைக் குழுவில் சின்ன. இராசம்--ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் (தி.மு க.), ச. வேதரெத்தினம் (தி.மு.க.), என். சொக்கலிங்கம் (த.அ.க.), மற்றும் சில தோழர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

அந்த 19 பேர் கொண்ட குழுவைச் சேர்ந்த வி. அப்பாகுட்டி (காங்.), சிவ. கனகசுந்தரம் (தி. மு. க.), ஏ. கே. ஆர். முத்துகுமாரசாமி (வர்த்தகர்) ஆகியோரும், துணைக் குழுவைச் சேர்ந்த தோழர்களும் இதுவரை ஏறக்குறைய ரூ. 5,000 சேர்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு கீற்றும், மூங்கில்களும் வாங்கிக் கொடுத்துள்ளனர்.

# பதுக்கல்காரர்கட்குக் கடும் தண்டனை

### சட்டத்தைத் திருத்த மத்திய அரசு முன்வருகிறது

புதுடில்லி, ஆக. 25—

இன்றியமையாப் பண்டங்களைப் பதுக்கி வைப்பவர்களுக்குரிய தண்டனையை 5-ஆண்டுகளாக உயர்த்த வகைசெய்யும் சட்டத் திருத்தம் விரைவில் நிறைவேற்றப்படும்.

இப்போதிருக்கும் சட்டப்படி மூன்ருண்டு வரையில்தான் சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

பதுக்கப்பட்ட பொருட்களை அரசு பறிமுதல் செய்யவும், உற்பத்தியாளர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் இருப்பு வைத்துக் கொள்ளாதிருக்கவும், பல தடவைகள் சட்டத்தை மீறிப் பதுக்கி வைத்திருந்தவர்கள் மீண்டும் அவ்வணிகத்தில் ஈடுபடாமல் தடைசெய்யவும் இச் சட்டத் திருத்தத்தில் வகைசெய்யபெட்டுள்ளது.

# தமிழகக் காங்கிரசு மேடைப் பேச்சாளர்களே!

இன்னம் சில நாட்களில் மைசூர் மாநிலம் மதுவிலக்கை அகற்றுகிறது! அங்கே காங்கிரசுதான் ஆளுகிறது!

அதற்கு முன்னுலே ஆந்திரத்தில் மதுவிலக்குத் தகர்ந்தது! அங்கேயும் காங்கிரசுதான் ஆளுகிறது!

தமிழகத்தின் இடையிலே அமைந்துகிடக்கிறது புதுவை மாநிலம்; அங்கே மதுவிலக்கு நடைமுறையில் இல்லை; அங்கே ஆட்சிபுரிவதும் காங்கிரசே!

### அங்கெல்லாம்...

காந்தியின் உயிர்மூச்சான -- சீர்திருத்தக் கொள்கையான மதுவிலக்கை, அவருடைய சீடகோடிகள் காசுக்கு விற்றுவிட்டார்கள்!

ஆனுல்...எத்தனைக் கோடி இடர்ப்பாட்டுக்கு இடையிலும் தமிழக அரசு, மதுவிலக்குக் கொள்கையில் இன்னமும் உறுதியாய் இருக்கிறது! காரணம், இங்கே ஆளுவது காங்கிரசு அல்ல---மக்கள் நலனில் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம்!

இதற்குக்கூட கழக ஆட்சியைக் குறைதான் சொல்வீர்களா?

# தூத்துக்குடியில் அறிஞர் அண்ணு

## நள்ளிரவிலும் நகர மக்கள் வரவேற்ற காட்சி

தூத்துக்குடி, ஆக. 24—

முதலமைச்சர் அண்ணு அவர்கள், இன்று நள்ளிரவில் தூத்துக்குடி நகராட்சி மன்றத்தின் வரவேற்பை ஏற்ருர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அண்ணு பேசுகையில், 'இந்த நேரத்தில் ஒரு நகராட்சியின் வரவேற்பைத் தாம் ஏற்றது இதுதான் முதல் தடவை' என்று குறிப்பிட்டார்.

இரவு 11-மணியளவில் அண்ணு அவர்கள் நகருக்கு வந்துசேர்ந்தார்.

திறந்த ஜீப் காரில் நகர வீதிகளிலே பவனி வந்தார்.

அந்த நள்ளிரவிலும் கூடி நின்ற மக்கள் ஆடவரும் பெண்டிரும் வாழ்த்தொலி முழங்கி வரவேற்றனர்.

அண்ணு அவர்கள் வந்த வழி நெடுகிலும் மக்கள் திரண்டிருந்தனர். எங்கும் விழாக்கோலமாக இருந்து.

நகராட்சி வரவேற்பு விழாவில், சட்டமன்ற அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனுரும் கலந்துகொண்டார்.

நகராட்சி வரவேற்புக்குப் பின், நகரில் நடைபெற்ற மாபெரும் வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**அந்தக் கூட்டத்தில் அண்ணு அவர்களுக்குத் தங்கச் செங்கோல் பரிசு அளிக்கப்பட்டது.**

பிரிட்டனில் பண்ணைத் தொழிலாளரின் திறமையை அதிகரிப்பதற்காக 20 இலட்சம் பவுனில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தங்களுடைய இளம் ஊழியர்களுக்குப் படிப்புக்கு அதிக நேரம் கிடைக்கும்படிச் செய்ய பண்ணைச் சொந்தக்காரர்களுக்கு ஊக்கச் சலுகை அளிக்கப்படும்.

# நடக்க இருப்பவை

## 27--8--67

**காஞ்சிபுரம்**

தி.மு.க. சார்பில் சட்டமன்ற உறுப்பினர் இராம. அரங்கண்ணலுக்குப் பாராட்டு; இரவு 7 மணிக்கு கங்கைகொண்டான் மண்டபத்தில்: தலைவர்; கே. டி. எஸ். மணி எம்.சி., பாராட்டுவோர் : வேலூர் நாராயணன், காஞ்சி. கல்யாணசுந்தரம், சி.வி.எம். அண்ணுமலை எம்.எல்.ஏ,, கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ,, என். கிருட்டினன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., வி. என். மார்க், வெ. சம்பந்தம், மற்றும் பலர்.

**தக்கோலம்**

தி.மு.க.சார்பில் மாலைமேணிக்கு எழில் மண்டபத்தில்; தலைவர்: டி. இராசு பி.ஏ.பி.எல்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, என். வி. நடராசன் எம்.எல்.சி., இரா. சம்பந்தம், வி. முனுசாமி எம்.சி., சா. கணேசன் எம்.சி., ஏ. எல். சி. கிருட்டிணசாமி, எஸ்.ஜே. இராமசாமி எம்.எல்.ஏ., ஜி. எல்லப்பன், ஏ. சி. இராமநாதன்.

**சென்னை 67-வது வட்டம்**

நாவலர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு எழும்பூர் வீராசாமி பிள்ளை தெருவில்; தலைவர் : என். கே. சாகுல் அமீது ; பேசுவோர்: க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி. வேலூர் நாராயணன் எம்.ஏ., பி.எல்., என்.கணபதி பி.எஸ்சி., பி.எல்., சுந்தரதாசன்.

**மதுரை 31-வது வட்டம்**

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு பழைய குயவர் பாளையம் சாலையில்; தலைவர் : எம். எம். முத்தரசு ; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி,, பி எஸ். மணியம் பி.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ; சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ.பி.எல்.

**திருவில்லிபுத்தூர்**

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு ஆத்துக்கடைத் திடலில்; தலைவர்: எஸ். இராமதாசு; பேசுவோர்: மேத்தா எம்.எல்.ஏ. மா. குருசாமி எம்.சி., ச. அமுதன் பி.ஏ., ஆர். கே. துரை. நாரணன், க. அ. மணிமாறன், அதிவீரபாண்டியன்.

**புதுக்கோட்டை**

தி.மு.க. சார்பில், மாலை 6-30 மணிக்கு, திலகர் திடலில்; தலைவர் : சி. சேதுராமன் ; பேசுவோர் : நன்னிலம் நடராசன், கே. வி. சுப்பையா பி.ஏ., எம்.எல்.ஏ., அ தியாகராசன், மு.இயலரசன், கோ.காசிநாதன்.

## குழுக் கூட்டம்

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொது உறுப்பினர் கூட்டம், 27—8—67 காலை 9-மணிக்கு சென்னை-சேத்துப்பட்டு செகநாதபுரம் தருமலிங்கம் லாண்டிரியில், சங்கத் தலைவர் சி. ஆர். கோலப்பா தலைமையில் நடைபெறும்.

## பாலர் அரங்கம்

ஆகஸ்டு 25, 26-ந் தேதிகளில் மாலை 4-மணிக்கு

எம். ஜி. எம். படக் கம்பெனியின்

'ஆப்பிரிக்க நடனங்கள்'

ஆகஸ்டு 27-ந் தேதி மாலை 4-மணிக்கு

சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளால்

'சிறுவர் கலை நிகழ்ச்சி'

கட்டணம் வழக்கம்போல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பெறுவது.